**செய்தி வெளியீடு எண்:138** **நாள்:24/02/2009**

## <u>செய்திக்குறிப்பு</u>

### <u>சட்டமன்றப் பேரவையில் முதல் முறையாக மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் ஆண்டறிக்கை</u>

தமிழக அரசானது உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கி வருகின்றது. அதிக அதிகாரங்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல், வெளிப்படையான நிர்வாக மேலாண்மைக்கான பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. அதன் ஒருபகுதியாக, மூன்றடுக்கு ஊராட்சி நிர்வாகத்தின் பல்வேறு பணிகளை தொகுத்து ஒரு ஆண்டறிக்கையினை தயாரித்து சட்டமன்றத்தில் வைத்துள்ளது.

இந்த ஆண்டறிக்கையானது, ஊராட்சி அமைப்புகளின் ஒட்டுமொத்த செயல்பாடுகளை பிரதிபலிக்கும் வகையிலும், நிர்வாகத்தின் வெளிப்படையான செயல்பாடுகளை பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது. இதுவரை, மாவட்ட ஊராட்சி அமைப்புகளின் ஆண்டறிக்கை மட்டுமே சட்டப்பேரவையில் வைக்கப்பட்ட நிலையில், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கான ஆண்டறிக்கைகளையும் தொகுத்து, ஒரே அறிக்கையாக சிறப்பான முறையில் தயாரித்து வைக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கான **2006–07, 2007–08**ம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைகள் சட்டப்பேரவையில் வைக்கப்பட்டது. இந்த ஆண்டறிக்கைகளில், தற்போதைய அரசு பொறுப்பேற்றது முதல் ஊராட்சிகளுக்கான தேர்தல், உள்ளாட்சியில் அதிகார பகிர்வு, சட்டத்திருத்தங்கள், விதி திருத்தங்கள் கடந்த இரண்டாண்டுகளில் விடுபட்ட முக்கிய அரசாணைகள், ஊராட்சிகளின் நிதி ஆதாரங்கள் மற்றும் திறன் மேம்பாடு தொடர்புடைய விபரங்கள் இடம் பெற்றுள்ளன.

இனிவரும் ஆண்டுகளில், ஒவ்வொரு ஆண்டும் இத்தகைய அறிக்கைகள் சட்டப்பேரவையில் வைக்கப்பட உள்ளது. இந்த அறிக்கையானது, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், பத்திரிக்கையாளர்கள் மட்டுமல்லாது பொதுமக்களுக்கும் பயனுடையதாக அமையும்.

***************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9